[1969 மார்ச் 21

2. நடைமுறைக் கேள்வி—தொடர்ச்சி.

மூலவினாவில் ஒரு பகுதி நீக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஹாண்டே அவர்கள் முதலில் கேள்வி கொடுத்திருக்கிறார்கள். கடைசியாக (ஷி) பகுதியை நீக்கித்தான் அனுமதிக்கப்பட்டு டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. 29—7—68-ல் அனுப்பியதில் ஷி) பகுதி இல்லை. கேள்வி கேட்டிருப்பது வேறு. கேள்விக்கு விளக்கம் கேட்கப்பட்டிருக்கிறது. (ஷி)-க்கு என்ன ஆதாரம் என்று கேட்டிருக்கிறார்கள் அலுவலகத்திலிருந்து. கடைசியாக அனுமதித்தபோது (ஷி) பகுதியை நீக்கித்தான் அனுமதித்திருக்கிறார்கள். அதற்கான தகவல் உறுப்பினர் அவர்களுக்கு 29—7—68-ல் அனுப்பப்பட்டிருக்கிறது. ஆகவே, அது அனுமதிக்கப்பட்டு அதற்குரிய விடை ஏன் இல்லை என்று கேட்பது ஒழுங்குப் பிரச்னையாகாது.

3. தன்னிலை விளக்கம்

(அ) நடைமுறைக் கேள்வி எழுப்பும் நேரமும், வினா நேரத்திற்குப் பின் தகவல் கோர (ஸீரோ அவர்) அனுமதிப்பது குறித்தும் ஹாண்டே அவர்களின் விளக்கம்.

DR. H. V. HANDE : On a point of personal explanation, Sir. Yesterday when I raised a point of order, immediately after questions were over, the Hon. Speaker asked me under what rule I had raised the point of order. May I point out that sub-rsle (4) of Rule 83 says as follows :—

A point of order may be raised in relation to the business before the House at the moment.

It was to elicit information from the Hon. Chief Minister regarding the discussions he had with the Prime Minister and other Ministers in Delhi recently and whether he could explain to the House the discussions he had at Delhi. The Hon. Ex-Speaker had allowed Thiru K. Vinayakam a number of times to raise point of order like that to elicit information from the Chief Minister. I raised my point of order like that.

Immediately after questions were over, this is mild zero hour we are having. Even in Parliament, the move is to extend the zero hour. May I request you, Sir, to be more liberal during zero hour? I was not for raising any privilege issue but my point was to request the Hon. Chief Minister to explain to the House the discussions he had with the Prime Minister and other Minister of Delhi as regards the burning problems of the day, i.e., Centre-State relationship, etc. That was in relation to the business before the House at the moment.

நற்பகல் 10-00.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நன்றாக விளக்கம் சொல்ல விரும்புகிறேன். நான் சொல்லுவது, எந்தவிதமான பாயிண்ட் ஆஃப் ஆர்டரும் இல்லை என்பதுதான். இப்பொழுது அவர்கள் 'ஸீரோ அவர்' வேண்டுமென்று சொல்லுகிறார்கள் பார்லிமெண்டிலே கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். கொடுக்கின்ற நேரத்தில் எவ்வளவு ஜாக்கிரதையாக அந்த வார்த்தைகள் வந்திருக்கின்றன என்பதைப் பத்திரிகைகளில் பார்த்திருக்கலாம். 'ஸீரோ அவரைப் பயன்படுத்தும்பொழுது எவ்வளவு விழிப்பாக இருக்க வேண்டும்? இந்த 'ஸீரோ அவர்' என்பதை அங்கே கொடுத்திருக்கிறார்கள். அது நம்முடைய விதிமுறைகளில் கொடுக்கப்பட